2014 ஜூலை 17]
168—

தொழில் நிறுவனம்

*14518—**திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதியில் மின் சாதனப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம், மேலூர் தொகுதியில் மின் சாதனப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும்கூட, ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் பல்வேறு வகைகளில் மாவட்டத் தொழில் மையம் மூலமாக உதவிகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மதுரை மாவட்ட தொழில் மையம் மூலமாக 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2013–2014 ஆம் ஆண்டு வரை வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் 26 நபர்களுக்கு ரூ.49 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் கடன் வழங்கப்பட்டு, ரூ.7.36 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது.

மேலும், மேலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் முதலீட்டு மானியமாக ரூ.3,63,000/– வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் எண்ணங்களை விரைந்து செயலாக்குவதில் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம்

புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி முன்னணி பெற்றிருக்கிறது. மதுரை மாவட்டம், மேலூர் சட்டமன்றத் தொகுதியில் மின்னணு தொழிற்சாலைகள் வேண்டும் என்ற கோரிக்கைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே ஆர்வம் உள்ளவர்களுக்கு எவ்வளவு தூரம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு உதவி செய்கிறது என்பதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்வரும் காலங்களிலாவது ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களை அழைத்து மேலூர் தொகுதியில் மின்னணுப் பொருட்கள் உற்பத்தித் தொழிற்சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, அப்பகுதியிலே தொழில் முனைவோர் தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், அவர்களை அழைத்துப் பேசி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் அந்தப் பகுதியிலே அத்தகைய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு ஆய்ந்து, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் மின் சாதனப் பொருட்கள் தயாரிப்பில் 22 நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. அதேபோன்று, மதுரை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய மூன்றாண்டுகால ஆட்சியில், 126 நிறுவனங்களுக்கு ரூ.414 இலட்சத்தில் முதலீட்டு மானியமும், 116 நிறுவனங்களுக்கு ரூ.66.39 இலட்சம் குறைந்த அழுத்த மின் மானியமும், 128 நிறுவனங்களுக்கு ரூ.149.84 இலட்சத்திற்கு மின்னாக்கி மானியமும், 59 நிறுவனங்களுக்கு ரூ.101 இலட்சத்திற்கு மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியமும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 169, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.